**சப்பிரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்**
**வலய கல்விப் பணிமனை – எம்பிலிபிடிய**
செயலட்டை

வாரம்- 07
தரம் - 08 கர்நாடக சங்கீதம் 14-18/ஜுன்/2021

## நாட்டார் பாடல்களின் கலாசாரப் பின்னணி

- ➢ பாமர மக்கள் முதல் படித்தவர் வரை சுவைத்து அனுபவிக்கக் கூடிய பாடல்கள் நாட்டார் பாடல்களாகும்.
- ➢ இதன் மறுபெயர்கள் : பொதுஜனகானம், பாமரஜனகானம், எழுதாக் கவிதைகள், வாய்மொழி இலக்கியம்.
- ➢ நாட்டார் பாடல்கள் பாடப்படும் இராகங்கள் : ஆனந்தபைரவி, நாதநாமக்ரியை, புன்னாகவராளி, நவரோஜ், குறிஞ்சி
- ➢ நாட்டார் பாடல்களின் சிறப்புக்கள :
  - சாஸ்திரிய இசைக்கு முற்பட்டது.
  - இலக்கணங்கள் வகுக்கப்படவில்லை.
  - இலகுவான தாளங்களில் பாடப்படும்.
  - இப்பாடல்களின வர்ணமெட்டுகள் சுலபமானவையாகவும், கவர்ச்சிகரமானதாகவும் காணப்படும்.
  - மனிதனுடைய பிறப்பு முதல் இறப்பு வரை இப்பாடல்கள் தொடர்புடையதாக அமைந்திருக்கும்∴
    - o குழந்தை பிறந்தவுடன் மருத்துவிச்சி வாழ்த்துப் பாடலைப் பாடுவார்.
    - o அன்னை குழந்தையை உறங்க வைகக் தாலாட்டுப் பாடலைப் பாடுவார்.
    - o இளமையில் விளையாட்டுப் பாடல், வேடிக்கைப் பாடல், காதல் பாடல் ஆகியவற்றைப் பாடுவார்.
    - o தொழில் செய்யும் போது அலுப்புத் தீர தொழில் பாடல்களைப் பாடுவார். (ஓடப்பாடல், கப்பற்பாடல், ஏற்றப்பாடல், அரிவுவெட்டுப் பாடல், அறுவடைப்பாடல்)
    - o கடவுள் வழிபாட்டிலும், சமூகக் கொண்டாட்டங்களிலும் நாட்டார் பாடல்களைளக் பாடுவார்.
    - o மனிதனின் இறப்பின் போது ஒப்பாரிப் பாடலைப் பாடுவார்.

- • பிரதேச ரதீயாக பல நாட்டார் பாடல்கள் காணப்படுகின்றன.
    - o மலைநாடு : கொழுந்துப்பாடல், காமன் கூத்து, ஒயிலாட்டம்
    - o மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் : வசந்தன் பாடல்கள்
    - o மன்னார் : தென்மோடிப்பாடல்கள்

செயற்பாடு – 01

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

01.நாட்டார் பாடல் என்றால் என்ன?

02.நாட்டார் பாடலின் மறுபெயர்களை குறிப்பிடுக.

03.நாட்டார் பாடல் பாடப்படும் இராகங்கள் எவை?

04.நாட்டார் பாடலின் சிறப்புகளை குறிப்பிடுக.

05.குழந்தை பிறந்தவுடன் பாடப்படும் பாடல் எது?

06.குழந்தையை உறங்கவைக்க பாடப்படும் பாடல் எது?

07.தொழில் பாடல்கள் 3 தருக.

08.உமக்கு தெரிந்த நாட்டார் பாடல்கள் ஐந்தினை குறிப்பிடுக.